# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093626

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 03/20 Date: நாள் 20.10.2020

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 41, 102

   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the PC Act 2018 Sections பிரிவுகள்: 7 (a)

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20.10.2020 Date to : நாள் வரை 20.10.2020

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 hrs Time to : நேரம் வரை 22.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.10.2020 Time : நேரம் 23.15 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 23.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ரகசிய தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3. கி.மீ வடமேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திண்டுக்கல்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சுந்தரராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. சின்னமுத்து

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. A. பெருமாள், துணை இயக்குநர் 2. திருமதி. த. பார்வதி, உதவியாளர் 3. திரு. வை. செல்வமணி, அலுவலக உதவியாளர் திண்டுக்கல் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை தற்காலிக பணியாளர்கள் 4. திரு. த. [illegible], கணினியாளர் மற்றும் 5. திருமதி. M. சாந்தி, தரவு

8. Reasons for delay in reporting by the complainant / Informant: தரவு ஆப்பரேட்டர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம், திண்டுக்கல்.

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

20.10.2020 ஆம் தேதியன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்தில் கிராவல் மண் எடுத்து குவாரி நடத்த உரிய உரிமம், நடைசீட்டு வழங்குவதற்கு விண்ணப்பதாரர்களிடம் இருந்து திண்டுக்கல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்கள் கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மதுரை ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் அவர்கள் திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு இன்று 20.10.2020 மாலை சுமார் 17.00மணிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் இயங்கிவரும் துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்திற்குள் மதுரை, திண்டுக்கல், தேனி ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.P.சுந்தரராஜன் மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது அந்த அலுவலகமானது அறை எண் 277 மற்றும் 283 ஆகிய இரு அறைகளில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/10/20.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.10.2020 - 00.30 hrs.

Name: பெயர் P. Sundararajan,
Rank: நிலை Inspector No. எண் of Police, Vigilance and Anti-Corruption, Dindigul

இயங்கி வருகிறது. அந்த சமயத்தில் துணை இயக்குநர் அலுவலகத்தில் திரு.A.பெருமாள், துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திண்டுக்கல் மற்றும் 2).திருமதி.த.பார்வதி, த/பெ.தங்கப்பன், உதவியாளர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திண்டுக்கல் 3). திரு.வெ.செல்வமணி, த/பெ.வெள்ளைச்சாமி, அலுவலக உதவியாளர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திண்டுக்கல்.4) திரு.த.தினேஷ்குமார், த/பெ.தனபால், கணக்காளர், (தற்காலிக பணியாளர்),திண்டுக்கல் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை,திண்டுக்கல் 5) திருமதி.மூ.சாந்தி, த/பெ.மூக்கையா, தரவு நுழைவு ஆப்பரேட்டர், (தற்காலிக பணியாளர்) திண்டுக்கல் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை, திண்டுக்கல் ஆகியோர் ஆஜரில் இருந்தார்கள். பின்னர் நான் ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் மற்றும் குழுவினருடன் அறை எண் 277ல் உள்ள துணை இயக்குநர் அலுவலகத்தை சோதனையிட் அந்த அலுவலகத்தின் நுழைவு வாயின் வலது பக்கம் இருந்த சுமார் 6அடி நீள மரபெஞ்ச் கீழே ரப்பர்பேண்ட் போட்டு சுருட்டிய நிலையில் ரூ.20,000/-ம் (500x40) அந்த பெஞ்சை ஒட்டி வடக்கு பக்கம் சிறுசிறு கிரானைட்கற்கள் வைக்கப்பட்டிருந்த இரும்பு ரேக்கின் கீழே மடித்த நிலையில் ரூ.15,150/-(500x26, 200x6, 100x9, 50x1) இருந்தது கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக அப்போது ஆஜரில் இருந்த துணை இயக்குநர், திரு.பெருமாள் அவர்களிடமும், அலுவலகத்தில் ஆஜரில் இருந்த மற்ற அலுவலர்களிடமும் கேட்க அதற்கு அவர்கள் எந்த முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. அதேபோல் அறை எண் 283ஐ சோதனையிட அலுவலக உதவியாளர் திரு.செல்வமணி அமர்ந்திருந்த இருக்கைக்கு இடது பக்கம் இருந்த மரத்தால் ஆன ரேக்கின் இரண்டாவது ரேக்கில் இருந்த Permit Book-களுக்கு இடையே இருந்த கரிய காளியம்மன், வேலுச்சாமி என்று பென்சிலால் எழுதப்பட்ட காக்கி நிற கவரில் ரூ.20,000/-(500x40=20,000/-) இருந்தது. மேற்படி செல்வமணியின் இருக்கைக்கு பின்புறம் இருந்த சிறிய இரும்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு மேல் Red பிரிக்ஸ்(s) R. சிவா என்று பென்சிலால் எழுதப்பட்ட காக்கி கவரில் ரூ.5,000/-(500x10=5,000/-) இருந்தது. மேலும் திரு.செல்வமணி அமர்ந்திருந்த இருக்கையின் வலது பக்கம் உள்ள சிமெண்ட் சிலாப் ரேக்கில் KNR Reddi என்று எழுதப்பட்ட காக்கி நிற கவரில் ரூ.25,000/-(500x50=25,000/-)ம் இருந்தது. அதேபோல் திரு.செல்வமணியின் இருக்கைக்கு முன்பு போடப்பட்டிருந்த பெரிய டேபிளின் மேல் வைக்கப்பட்டிருந்த

ஆவணங்களுக்கு இடையே இருந்து ரூ.15,000/-(2000x1, 500x26) பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி கவரில் இருந்த பணம் பற்றியும், கவரில் எழுதியிருந்த எழுத்துக்கள் பற்றியும் செல்வமணியிடம் கேட்க அதுபற்றி தனக்கு ஏதும் தெரியாது என்று தெரிவித்தார். மேலும் மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் பற்றி கேட்க அதற்கு அவர் தகுந்த முகாந்திரம் ஏதும் தெரிவிக்கவில்லை. மேலும் மேற்படி அறை எண் 277 மற்றும் 283ல் ஆஜரில் இருந்த நபர்களை சோதனை செய்ய 1). திரு.N.ராமசாமி அவர்களிடம் ரூ.20,050/-ம், 2). திரு.P.செல்லமுத்து, அவர்களிடம் ரூ.36,180/-ம் 3). R.ராஜேந்திரன் அவர்களிடம் ரூ.1,570/-ம், 4).M.சக்திவேல் அவர்களிடம் ரூ.2,830/-ம், 5).J.காஜாமைதீன் அவர்களிடம் ரூ.1060/-ம், 6). M.சேகரிடம் பணம் ஏதும் இல்லை 7). M.கதிர்வேல் அவர்களிடம் ரூ.10,200/-ம் 8) திரு.அகிலகுமார் அவர்களிடம் ரூ.1,160/-ம், 9) திரு.உமாமகேஷ்வரன் அவர்களிடம் ரூ.10,050/-ம் 10) திரு.R.சிவா அவர்களிடம் ரூ.23,950/-ம் இருந்ததை அவர்கள் சொந்தபணம் என்று சொன்னதின்பேரில் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதேபோல் துணை இயக்குநர் திரு.பெருமாள் அவர்களிடம் ரூ.300/-ம், அலுவலக உதவியாளர் திரு.செல்வமணியிடம் ரூ.500/-ம், தற்காலிக உதவியாளராக பணியாற்றிய திரு.A.சிவா என்பவரிடம் ரூ.700/-ம், இருந்ததை அவர்கள் தங்களின் சொந்த பணம் என்று சொன்னதின்பேரில் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதேபோல் உதவியாளர் திருமதி.சாந்தி, மற்றும் தற்காலிக உதவியாளர்கள் திரு.தினேஷ்குமார் மற்றும் திருமதி.சாந்தி ஆகியோர்களிடம் பணம் ஏதும் இல்லை. மேலும் மேற்படிஅறை எண் 277ல் இருந்து கைப்பற்றபட்ட பணம் ரூ.35,150/-ம், அறை எண்283ல் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.65,000/-ம் ஆக மொத்தம் ரூ1,00,150/- பற்றி ஆஜரில் இருந்த துணை இயக்குநர் உட்பட அனைத்து அலுவலர்களிடமும், ஆஜரில் இருந்த வெளிநபர்களிடமும் கேட்க யாரும் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி கணக்கில் வராத சந்தேகத்திற்கு இடமான தொகை ரூ. 1,00,150/-ஆனது குவாரி சம்மந்தமான நடைசீட்டு மற்றும் உரிமம் வழங்குவதற்காக குவாரி உரிமையாளர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணமாக கருதி கைபற்றப்பட்டப்பட்டது. மேலும் துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அவர்கள் அமர்ந்திருந்த அறை மற்றும் திருமதி.த.பார்வதி, உதவியாளர், திரு.த.தினேஷ்குமார், கணக்காளர், (தற்காலிக பணியாளர்) மற்றும் திருமதி.மூ.சாந்தி, தரவு நுழைவு ஆப்பரேட்டர், (தற்காலிக பணியாளர்) ஆகியோர் அமர்ந்திருந்த அறையை சோதனை செய்ய வேறு ஏதும் பணம் கைப்பற்றப்படவில்லை.மேலும் இந்த அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1). நிரந்தர அலுவலர்களின் அசல் வருகைப்பதிவேடு-2020 2). தற்காலிக அலுவலர்களின் அசல் வருகைப்பதிவேடு-2020 3). நடைசீட்டு

பதிவேடு 2020-21, ஆறு தாலுகாவிற்கான பட்டா பதிவேடு-6, மற்றும் புறம்போக்கு பதிவேடு-6 மற்றும் திண்டுக்கல் தாலுகா பதிவேடு-1, 4) கிரானைட் நடைசீட்டு பதிவேடு 2020-21, 5) எம்சான்ட் நடைசீட்டு பதிவேடு 2020-21, 6) பெரும் கணிம நடைசீட்டு பதிவேடு 2020-21, 7) கொடிநாள் வசூல் பதிவேடு-2019 ஆகிய பதிவேடுகள் ஆய்வு செய்யப்பட்டது. அந்த பதிவேடுகளில் பணம் செலுத்தப்பட்ட DD மற்றும் கருவூலக சலான் ஆகியவற்றின் எண்கள் குறிப்பிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. தவிர நேரடியாக வெளிநபர்களிடமிருந்து பணம் பெற்ற பதிவுகள் ஏதுவும் இல்லை. மேலும் இது சம்மந்தமாக ஆஜரில் இருந்த துணை இயக்குநர் திரு.பெருமாள் அவர்களிடம் கேட்க அலுவலகத்தில் வெளிநபர்களிடமிருந்து எந்தவிதமான பணம் சம்மந்தப்பட்ட பரிவர்தனையும் நேரடியாக செய்யப்படுவதில்லை என்றும், அலுவலகத்தில் நிரந்தர வைப்புத்தொகை ஏதும் பராமரிக்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பதிவேடுகளின் நகல்கள் தவிர வேறு ஆவணங்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை. எனவே மேற்படி கணக்கில் வராத சந்தேகதிற்கிடமான பணமானது குவாரி சம்மந்தமான நடைசீட்டு மற்றும் உரிமம் வழங்குவதற்காக குவாரி உரிமையாளர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணமாக கருதி சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கை 20.10.2020ம் தேதி மாலை 17.00 மணிமுதல் 22.30 வரை தயார் செய்து கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணத்துடன் நிலையம் வந்து மேற்படி துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்தில் ஆஜரில் இருந்த 1) திரு.அ.பெருமாள், துணை இயக்குநர் 2) திருமதி.த.பார்வதி, உதவியாளர், 3) திரு.வெ.செல்வமணி, அலுவலக உதவியாளர், 4) திரு.த.தினேஷ்குமார், கணக்காளர்,(தற்காலிக பணியாளர்) 5) திருமதி.மூ.சாந்தி, தரவு நுழைவு ஆப்பரேட்டர், (தற்காலிக பணியாளர்) ஆகியோர்கள் மீது திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்3/2020, சட்ட பிரிவுகள் 41 r/w 102 குவிமுச r/w 7(a) ஊழல் தடுப்புச்சட்டம் 1988 உடன் ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட)சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், தீடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை அறிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,150/- ஆகிவற்றை திண்டுக்கல் ம்ாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் மறறும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் நகலை சம்மந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.